| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும்<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் : | சிவகங்கை | காலம் : | 26/04/2017 | முதல் | 30/04/2017 |
| | அறிக்கை எண் : | 033 / 2017 | வெளியீட்டு நாள் : | | 25/04/2017 | |

| கடந்த கால வானிலை 21/04/2017 முதல் 24/04/2017 வரை | |
|---|---|
| **காரணிகள்** | **கடந்த கால வானிலை** |
| மழை (மி.மீ) | 3.1 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 40-41 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 27-28 |
| மேக மூட்டம் | 4-5 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 40-62 |
| காற்றின் வேகம்(கி.மீ. / மணி) | 12-17 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை** ( 30-04-2017 8.30 மணி வரை )

| காரணிகள் | 26-04-2017 | 27-04-2017 | 28-04-2017 | 29-04-2017 | 30-04-2017 |
|---|---|---|---|---|---|
| | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| மழை (மி.மீ) | 15 | 10 | 5 | 0 | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 41 | 41 | 41 | 40 | 40 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 28 | 28 | 28 | 28 | 28 |
| மேக மூட்டம் | 4 | 4 | 4 | 5 | 5 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 55 | 55 | 55 | 55 | 55 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 45 | 45 | 45 | 45 | 45 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 10 | 10 | 10 | 10 |
| காற்றின் திசை | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு |

**குறுஞ்செய்தி :**
அடுத்த 3 நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு. எதிர்வரும் 5 நாட்களுக்கும் லேசான மேகமூட்டத்துடன் கூடிய அதிக வெப்பமான வானிலையே நிலவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள்: மா மற்றும் முந்திரி**

- தற்போது நிலவும் பருவநிலையில் முந்திரியில் தண்டுத் துளைப்பான் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதன் முக்கிய அறிகுறியாக மரத்தின் அடிப்பகுதியில் சிறு துளைகள் காணப்படும் அவற்றின் வழியே பிசின் போன்ற திரவம் வெளிவரும். மரங்களில் இலைகள் உதிர்ந்து மரம் முழுவதும் காய்ந்துவிடும்.. இதனைக் கட்டுப்படுத்த தோப்பை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். தாக்கப்பட்ட மரங்களை அப்புறப்படுத்த வேண்டும். கார்பரில் 50 சதம் நனையும் தூள் 0.1 சதம் மருந்தை தண்டுப்பகுதியில் சுமார் 1 மீட்டர் உயரம் வரை தடவிவிட வேண்டும்.
- தற்போது நிவவிவரும் சூழ்நிலையில் பழ ஈக்களின் தாககுதல் மாவில் தென்படுகின்றது. இதன் புழுக்கள் சதைப் பகுதியை தின்று அழிக்கும். தோலின் மேற்பரப்பில் பழுப்பு நிறத் திட்டுக்கள் காணப்படும். சேதமடைந்த பழங்கள் அழுகி கீழே விழுந்துவிடும். பாதிக்கப்பட்ட பழங்களை பறித்து அகற்றி விட வேண்டும் மரத்தைச் சுற்றி உழவு செய்து பழ ஈயின் கூட்டுப்புழுக்களை அழிக்கலாம். பென்தியான் 2 மிலி அல்லது மாலத்தியான் 2 மிலி மருந்தை 1 லி தண்ணீருடன் கலந்து தெளித்தால் பழ ஈக்களை கட்டுப்படுத்தலாம்
- பகல் மற்றும் இரவு நேரங்களில் வெப்பநிலை தொடர்ந்து உயர்வாக காணப்படுவதால் கால்நடைகளுக்கு நாள் ஒன்றுக்கு 80 முதல் 100 லிட்டர் தண்ணீரை 4 தவணையாக பகிர்ந்து கொடுக்கவும்.